கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவலால் அல்லது அதன் விளைவாக உங்களை வெளியேற்ற உங்கள் நில உரிமையாளர் முயற்சிக்கிறாரா?

அவர்களுக்கு சொல்லுங்கள்:

# இல்லை

நீங்கள் வீட்டு ஆலோசனையைத் தேடுகிறீர்கள் என்று சொல்லுங்கள். உங்களை வெளியேற்ற நில உரிமையாளர்கள் முறையான சட்ட நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அரசாங்கம் தற்காலிகமாக வெளியேற்றங்களை நிறுத்தியுள்ளது. உங்கள் நில உரிமையாளர் உங்களை வெளியேற்ற முயற்சித்தால், அது ஒரு சட்டவிரோதமான செயல் ஆகும்.

## கொரோனா வைரஸின் போது உங்கள் வாடகையை எப்படி செலுத்துவது என்று கவலைப்படுகிறீர்களா? அரசாங்கம் வாடகையாளர்களுக்கு உதவி செய்யத் தவறிவிட்டது என்று கோபப்படுகிறீர்களா? நீங்கள் இதில் தனியாக இல்லை.

இலண்டன் வாடகையாளர்கள் சங்கம் (LRU) இலண்டன் முழுவதும் ஆயிரக்கணக்கான வாடகையாளர்களால் ஆன ஒரு சங்கமாகும். ஒன்றுபட்டு நாங்கள் அனைவரும் நில உரிமையாளர்களுக்கு எதிராக நிற்கிறோம்.

LRU உறுப்பினர்கள் தற்போதைய கோவிட் -19 சூழலில் வாடகையாளர்களின் உரிமைகள் குறித்து பின்வரும் கேள்விகளையும் பதில்களையும் தொகுத்துள்ளனர்.

கோவிட் -19 காரணமாக வாடகை செலுத்த முடியாத வாடகையாளர்களுக்காக, வாடகை நிவாரணத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்த வேண்டும் என்று கோரி LRU ஒரு பெரிய பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது. மேலும் அறிய மற்றும் இந்தப் பிரச்சாரத்தில் பங்கேற்க பிரச்சார வலைத்தளத்திற்குச் செல்லவும். பிரச்சார வலைத்தளத்தை 6 மொழிகளில் மொழிபெயர்த்துள்ளோம்: ةُيَّبِرَعَلْا, বাংলা, Polski, Türkçe, Français, Español.

குறிப்பிட்ட அல்லது அவசர வீட்டு பிரச்சினைகள் பற்றி LRU உறுப்பினர்களுடன் கலந்துரையாட இந்தப் படிவத்தை நிரப்பவும். LRU-விடம் தற்போழுது மொழி பெயர்ப்பாளர்கள் இல்லை என்பதை தயவுசெய்து கவனத்தில் எடுத்துக்கொள்ளவும் (அதற்கான வேலைகளை நாங்கள் செய்துகொண்டு இருக்கிறோம்). எனவே ஆங்கிலத்தில் எழுதப்படாத படிவங்களுக்கு எங்களால் பதிலளிக்க முடியாமல் போகலாம்.

## மேலும் அறிய மற்றும் சங்கத்தில் ஈடுபட, இங்கே இணையவும்.

(28 ஆகஸ்ட் 2020)

## கொரோனா வைரஸ் காரணமாக இந்த மாதம் என்னால் எனது வாடகையைக் கட்ட  முடியாது. நான் என்ன செய்ய வேண்டும்?

உங்கள் வீட்டு உரிமையாளரிடம் உங்கள் வாடகையைக் குறைக்க (reduction) அல்லது நிறுத்துமாறு (suspension) கேளுங்கள். உங்கள் வாடகையைக் குறைக்க அல்லது நிறுத்த இங்கே உள்ள ஆங்கிலக் கடிதத்தை பயன்படுத்தவும். உங்கள் சொந்த சூழ்நிலைக்கு ஏற்ப இதை மாற்றிக் கொள்ளலாம். உணவு மற்றும் மருந்து போன்ற உங்கள் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தவுடன், வாடகை எவ்வளவு உங்களால் கட்டிட முடியும் என்று கணிக்க வேண்டும். முதலில் உங்களால் எவ்வளவு வாடகை கட்டிட  முடியும் என தெரிவிக்கலாம்.

கொரோனா வைரஸ் காரணமாக நிதி சிக்கல்களை சந்திக்கும் வாடகையாளர்களினால் பாதிக்கப்படும் வீட்டு உரிமையாளர்களுக்கு அரசாங்கம் வீட்டு மோற்கேஜ் (mortgage) கட்ட தேவையில்லை என்று அறிவித்துள்ளது. வீட்டு உரிமையாளர்கள் இதை அவர்களின் வாடகையாளர்களுக்கு தெரிவிக்க வேண்டியது அவர்களின் கடமை.

## எனது வீட்டு உரிமையாளரிடம் எனது வாடகையை குறைக்க அல்லது நிறுத்துமாறு கேட்டுள்ளேன். ஆனால் அவர்கள் அதை மறுத்துவிட்டார்கள். நான் என்ன செய்ய வேண்டும்?



நீங்கள் ஒரு நிறுவனத்தினூடாக  தொடர்பில் இருந்தால், அதற்கு பதிலாக உங்கள் வீட்டு உரிமையாளரிடம் நேரடியாக பேச முயற்சிக்கவும். உங்கள் வீட்டு உரிமையாளர் யார் என்று அறியவும், மற்றும் அவர்களின் முகவரி என்ன  என்பதை அறியவும்  உங்களுக்கு சட்டப்பூர்வமான உரிமை உள்ளது.

நீங்கள் LRU-இல் உறுப்பினராகிவிட்ட பின், அடுத்த நடவடிக்கைகளை எடுக்க நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய முடியும். LRU உறுப்பினராக சேர்ந்துகொள்ள  எங்கள் கோவிட்-19 படிவத்தை நிரப்பவும். அதில் உங்கள் தற்போதைய நிலைமையைப் பற்றி எங்களிடம் கூறுங்கள்.

வாடகைக் குறைப்பை நீங்கள் ஒரு தனி நபராகக் கோரியிருந்தால், உங்களுடன் வசிக்கும் வாடகையாளர்களுடன்/ குடும்ப உறுப்பினர்களுடன்

கலந்துரையாடி, அனைவரும் இணைந்து ஒரு கடித்தால் அல்லது மின்னஞ்சலை எழுத முயற்சிக்கவும்.

## நான் வருமானத்தை இழந்துவிட்டேன் என்பதை நிரூபிக்க என்னிடம் ஆதாரம் கேட்க வீட்டு உரிமையாளர் அல்லது வீட்டு முகவருக்கு (estate agent) உரிமை உள்ளதா?



உங்கள் நில உரிமையாளர் அல்லது வீட்டு முகவருடன் இந்த வகையான தகவல்களைப் பகிர்வது உங்களுக்கு உடன்பாடு இருக்கிறதா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். வீட்டு உரிமையாளர்கள் மற்றும் வீட்டு முகவர்கள் உங்களுக்கு வாடகைக் குறைப்பு அல்லது நிறுத்தத்தை சட்டப்படி வழங்க வேண்டிய கடமை இல்லை. அதனால் அவர்களின் கோரிக்கைகளுடன் ஒத்துழைப்பது உங்களுக்கு சாதகமாக அமைய வாய்ப்பை அதிகரிக்கும்.

உங்கள் வீட்டு முகவர் உங்களுக்கு உதவவில்லை என நீங்கள் நினைத்தால், உங்கள் வீட்டு உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரியைக் கேட்பதற்கும் அவர்களை நேரடியாகத் தொடர்புகொள்வதற்கும் உங்களுக்கு சட்டபூர்வமான உரிமை உள்ளது.

## நான் எனது வருமானத்தை இழந்துவிட்டேன். இப்போது என்ன அரசாங்க ஆதரவு பெற முடியும்?

அதிகரிப்பு மற்றும் சில தொழிலாளர்களுக்கு 80% வருமான உத்தரவாதம் ஆகியவற்றை அரசாங்கம் அறிவித்துள்ளது. இருப்பினும், இந்த கூடுதல் ஆதரவுக்கு தகுதி பெறாதவர்கள் இன்னும் நிறைய பேர் உள்ளனர். ஆனாலும் உங்களுக்கு என்ன நிதி ஆதரவு கிடைக்க கூடும் என்பதைச் சரிபார்க்க வேண்டியது அவசியம்.

உங்களுக்கு என்னென்ன நிதி ஆதரவு (benefits) மற்றும் நோய்வாய்ப்பட்ட ஊதியம் (sick pay) உள்ளன என்பதை அறியவும். அதற்கு எப்படி விண்ணப்பிப்பது என்பதை Citizens Advice & Turn2Us மூலம் அறியலாம்.

## நான் ஒரு புலம்பெயர்ந்து வந்துள்ள நபர். என்னால் நிதி உதவி பெற முடியாது.எனக்கு No Recourse to Public Funds (NRPF) ஸ்டேட்டஸ் உள்ளது. நான் என்ன செய்யலாம்?

புலம்பெயர்ந்து வந்திருப்பவர்களுக்கு அரசாங்கத்தின் "விரோத சூழல்" காரணமாக, இங்கு வசிக்கும் மற்றும் பணிபுரியும் ஏராளமானவர்களுக்கு நிதி உதவிகள் இல்லை. நீங்கள் இங்கு வசிப்பதற்கு ஆவணமற்றவராக இருந்தால் அல்லது உங்கள் குடியேற்ற நிலையின் ஒரு பகுதியாக "No Recourse to Public Funds" (NRPF) இருந்தால், அரசாங்கத்தின் உதவியை நீங்கள் பெற முடியாது. அரசாங்கத்தின் கொடுமையான கொள்கைகள் புலம்பெயர்ந்தோருக்கு ஆதரவளிப்பதற்கு பதிலாக அவர்களை தண்டிக்கின்றன.

இருப்பினும், இந்த நெருக்கடியின் போது ஆதரவுக்கு வேறு சில தேர்வுகள் உள்ளன:

- <u>இலவச பள்ளி உணவு:</u> நிதி உதவி பெறாத குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு தற்போது இலவச பள்ளி உணவு பெற முடியும். இந்த குழந்தைகளின் பெற்றோர் தங்களுக்கு இலவச பள்ளி உணவு பெற உரிமை உண்டு என்பதை தங்கள் பள்ளிக்கு தெரியப்படுத்த வேண்டும். ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு குழந்தைக்கும், உணவுக்காக அவர்கள் ஒரு £15 சீட்டைவழங்குவார்கள்.

- <u>வீடற்ற தன்மை:</u> இந்த தொற்றுநோய் பரவிக்கொண்டிருக்கும் போது யாரும் (அவர்களின் குடியேற்ற நிலையைப் பொருட்படுத்தாமல்) வெளியில் தூங்க விடக்கூடாது என்று அரசாங்கம் கூறியுள்ளதுடன், அனைவருக்கும் இடமளிக்குமாறு கவுன்சிலுக்கு அறிவித்துள்ளது தங்குமிட வசதிகள் இல்லாதவர்கை உங்களுக்குத் தெரிந்தால், அவர்களுக்கு தங்குமிடம் தேவைப்பட்டால், <u>Streetlink</u> -உக்கு அவர்கள் இருக்கும் இடத்தை அறியப்படுத்தவும். Streetlink home office-உடன் உங்கள் தரவுகளை பகிரும் நடைமுறை இருக்கலாம். எனவே பாதுகாப்பற்ற குடியேற்ற நிலை கொண்ட புலம்பெயர்ந்தோருக்கு இது பொருந்தாது.

- <u>உணவு வங்கிகள்:</u> உணவு வங்கிகள் இன்னும் திறந்த நிலையில் உள்ளன, மேலும் குடியேற்ற நிலையைப் பொருட்படுத்தாமல அனைவருக்கும் உதவ வேண்டும். உணவு பார்சலைப் பெற்றுக்கொள்ள, பொதுவாக ஒரு மருத்துவர், சமூக சேவகர் அல்லத

உதவி மையத்திலிருந்து ஒரு வவுச்சர் தேவைப்படுகிறது. உங்கள் அருகிலுள்ள உணவு வங்கியை இங்கே காணலாம்.

- புலம்பெயர்ந்தோர் மைய ஆதரவு: வறுமை மற்றும் கஷ்டங்களை எதிர்கொள்ளும் புலம்பெயர்ந்தோருக்கும் குடியேற்ற நிலையில் சிக்கல்கள் உள்ளவர்களுக்கும் ஆதரவளிக்கக்கூடிய பல நல்ல புலம்பெயர்ந்தோர் மையங்கள் உள்ளன. Hackney Migrant Centre & South London Refugee Service ஆகியன கோவிட் -19 இன் போது தொலைபேச ஆலோசனை மற்றும் ஆதரவு வழங்கும் சில மையங்கள் ஆகும் (இவை அனைத்து பெருநகரங்களிலும் உள்ள அனைத்த குடியேறியவர்களுடனும் வேலை செய்கின்றன).

குடிவரவு நிலையைப் பொருட்படுத்தாமல், வாடகையாளர்கள் ஒன்று சேரும்போது அவர்களுக்கு அதிக சக்தி இருப்பதையும், தனியாகச் செயல்படும்போது பெரும்பாலும் பாதிக்கப்படக்கூடியவர்களாகவும் புறக்கணிக்கப்படுபவர்களாகவும் இருப்பதை நாங்கள் அறிவோம். உங்கள் வீட்டு உரிமையாளர் உங்களை அச்சுறுத்துகிறார் என்றால், எங்கள் உறுப்பினராக இந்த கோவிட் -19 படிவத்தை நிரப்பி பதிவுசெய்யுங்கள். அதன் பின் உங்கள் தற்போதைய நிலைமையைப் பற்றி எங்களிடம் கூறுங்கள், நாங்கள் உங்களுக்கு பதிலளிக்க முயற்சிப்போம்.

எவ்வாறாயினும், துரதிர்ஷ்டவசமாக இந்த நேரத்தில் எங்களிடம் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லை என்பதை நினைவில் கொள்ளவும். தயவுசெய்து படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்ப முயற்சிக்கவும். தேவைப்பட்டால், தொலைபேசி மூலம் உங்களுக்கு விளக்கம் அளிக்கக்கூடியவரைக் கண்டறியவும் (விளக்கமளிக்க யாரையாவது கண்டுபிடிக்க முடியுமா இல்லையா என்பதை படிவத்தில் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்). தற்பொழுது பல மொழிகளை பேசும் ஒரு மொழி குழுவை உருவாக்க நாங்கள் முயற்சி செய்துகொண்டு இருக்கிறோம்.

## எனது முழு வாடகையையும் என்னால் கட்ட முடியாது. வாடகை செலுத்த முடியாத பிற வாடகையாளர்களுடன் நான் ஒன்று சேர முடியுமா?

இந்த நேரத்தில் தங்கள் முழு வாடகையை செலுத்த முடியாத LRU உறுப்பினர்கள் Can't Pay, Won't Pay என்ற பெரிய பிரச்சாரத்தைத் தொடங்க உள்ளனர். உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களுக்கு பணம்

செலுத்துவதற்கு நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம். அரசாங்கத்தை எங்கள் வாடகையை நிறுத்துமாறும் எங்கள் வாடகைக் கடனை (நிலுவை - arrears) அதிகரிக்க வைக்க வேண்டாம் என்றும் எமது கோரிக்கையை முன்வைக்கிறோம்.

வாடகை செலுத்த முடியாத தனிப்பட்ட வாடகையாளர்கள் எதிர்காலத்தில் தங்கும் இடத்தை விட்டு வெளியேற்றப்படுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கை எடுப்பது என்பது நம்மையும் அனைவரையும் பாதுகாப்பாக வைத்திருக்கக்கூடிய ஒரு வழியாகும் வீட்டு உரிமையாளர்கள் மற்றும் எஸ்டேட் முகவர்களிடம் இருக்கும் அதிகாரம் நாம் தனியாகவும் தனிமைப் படுத்தப் பட்டு இருப்பதைப் பொறுத்தது. உங்களைப் போன்ற அதே நிலையில் உள்ள மற்ற வாடகைதாரர்களுடன் பிரச்சாரத்தில் இந்த பிரச்சார இணையதளத்தில் பதிவு செய்து சேருங்கள்.



## எனது வாடகையை நான் முழுமையாக செலுத்தவில்லை என்றால் எனது வீட்டு  உரிமையாளர் என்னை வெளியேற்ற முடியுமா?

அனைத்து வெளியேற்றங்களையும் குறைந்தது செப்டம்பர் 20 (20th September) ஆம் தேதி வரை நிறுத்த முடிவு செய்துள்ளது.

உங்களை சட்டப்பூர்வமாக வெளியேற்ற உங்கள் வீட்டு  உரிமையாளர் உங்களுக்கு முறையான அறிவிப்பை வழங்க வேண்டும் (வழக்கமாக ஒரு Section 21 அல்லது Section 8 நோட்டீஸ்).  அதன் பின் உடைமை உத்தரவைப் பெற்றுக்கொள்ள நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும். பொதுவாக நீங்கள் 8 வார வாடகை செலுத்தாமல் வந்திருந்தால் நீதிமன்றம் வீட்டு உரிமையாளருக்கு சொத்தை வைத்திருக்க அனுமதிக்கும். இந்த புதிய சட்டத்தின் கீழ், வீட்டு உரிமையாளர்கள் குறைந்தபட்சம் அடுத்த வாடகையாளர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை தொடங்க முடியாது செப்டம்பர் 20 வரை. நீதிமன்றங்கள் மீண்டும் சாதாரணமாக செயல்படத் தொடங்கிய பின்பும் கூட வெளியேற்றும் செயல்முறை பெரும்பாலும் பல மாதங்கள் எடுக்கும், இப்போது கூட மெதுவாக உள்ளது.

உங்கள் வீட்டு உரிமையாளர் பூட்டுகளை மாற்ற முயற்சித்தால் அல்லது உங்களை அவர்களாகவே வெளியேற்ற முயன்றால், இது சட்டவிரோதமான வெளியேற்றமாகக் கருதப்படும். அப்படி அவர்கள் செயற்பட்டால் , உங்கள் வீட்டு  உரிமையாளரின் செயல்களை வீடியோ எடுக்கவும், இதனால் நீங்கள் இழப்பீடு பெறலாம்.

## எனது வாடகையை என்னால் செலுத்த முடியாததால் எனது வீட்டு உரிமையாளர் என்னை தொல்லை செய்கிறார். நான் என்ன செய்யலாம்?

உங்கள் வாடகையை கட்ட முடியாமல் போனதால், உங்களை அச்சுறுத்துவதற்கும் துன்புறுத்துவதற்கும் அல்லது உங்களை வெளியேறும்படி கட்டாயப்படுத்துவதற்கும் உங்கள் வீட்டு உரிமையாளருக்கு உரிமை இல்லை. நீதிமன்றம் மூலம் மட்டுமே நீங்கள் சட்டப்பூர்வமாக வெளியேற்றப் படலாம். உங்களைத் துன்புறுத்துவது அல்லது உங்கள் வீட்டில் உங்களை மிகவும் சங்கடப்படுத்துவது, உங்களை வெளியேற்றுவதற்கான ஒரு வகை சட்டவிரோத வெளியேற்றமாகும், அதற்காக நீங்கள் இழப்பீடு பெறலாம்

உங்கள் மீதோ உங்கள் உடமைகளின் மீதோ கை வைக்க உங்கள் வீட்டு உரிமையாளருக்கு உரிமை இல்லை. நீங்கள் பெறும் எந்தவொரு துன்புறுத்தலின் ஆதாரங்களையும், பாதுகாப்பாக இருந்தால், சேகரித்து வைக்க முயற்சிக்கவும். அதாவது உங்கள் வீட்டு உரிமையாளர் உங்களுக்கு அனுப்பிய அச்சுறுத்தல் text அல்லது photos. இது உங்களுக்கு நடக்கிறது என்பாதைLondon Renters Union-உக்கு இங்கே சொல்லுங்கள்.

உங்களால் முடியும் என்று உணர்ந்தால், பாதுகாப்பாக இருக்கும் என்றால், உங்கள் உரிமையாளருடன் உரையாடுங்கள். ஒரு வாடகையாளராக உங்களுக்கு உரிமைகள் உள்ளன என்பதை அவர்களுக்கு நினைவூட்டுங்கள். உங்களை நீக்குவதற்கு அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும் என்றும், அதற்கு முன் துன்புறுத்துவது அல்லது உங்களை கட்டாயப்படுத்துவது சட்டவிரோதமானது என்றும் அவர்களிடம் சொல்லுங்கள்.



## நான் ஒரு லாட்ஜர் என்று என் வீட்டு உரிமையாளர் கூறுகிறார். எனது உரிமைகள் என்ன?

உங்கள் வீட்டு உரிமையாளர் நீங்கள் இருக்கும் வீட்டில் வசித்தால், அவர்களுடன் ஒரு சமையலறை மற்றும் பிற பொதுவான இடங்களைப் பகிர்ந்து கொண்டால், நீங்கள் ஒரு லாட்ஜராக இருக்கலாம். வெளியேற்றத்திற்கான அரசாங்கத்தின் தற்காலிக தடை லாட்ஜர்களுக்கு பொருந்தாது. இருப்பினும், உங்கள் வீட்டு உரிமையாளர் உங்களை வெளியேற்றுவதற்கு முன்பு உங்களுக்கு 'நியாயமான அறிவிப்பை' வழங்க வேண்டும்.

நியாயமான அறிவிப்பு என்றால், உங்கள் வாடகையை எவ்வளவு அடிக்கடி செலுத்துகிறீர்களோ அதுவரை இருக்கும் அதாவது உங்கள் வாடகையை மாதந்தோறும் செலுத்தினால், நியாயமான அறிவிப்பு குறைந்தது ஒரு மாதமாகும்). இங்கே மேலும் படிக்க.

நியாயமான அறிவிப்பு என்றால், உங்கள் வாடகையை எவ்வளவு அடிக்கடி செலுத்துகிறீர்களோ அதுவரை இருக்கும் அதாவது உங்கள் வாடகையை மாதந்தோறும் செலுத்தினால், நியாயமான அறிவிப்பு குறைந்தது ஒரு மாதமாகும்). இங்கே மேலும் படிக்க.

உங்கள் வீட்டு  உரிமையாளர் உங்களுடன் வசிக்கவில்லை என்றால், உங்கள் வீட்டு உரிமையாளர் அப்படி  சொன்னாலும் கூட, நீங்கள் அநேகமாக ஒரு லாட்ஜர் அல்ல. (நீங்கள் வசிக்கும் ஆரம்பத்தில் உங்கள் வீட்டு  உரிமையாளர் உங்களுடன் வசிக்கவில்லை என்றாலும்  இது பொருந்தும்). நீங்கள் ஒரு லாட்ஜர் என்று கூறி உங்கள் உரிமையாளரால் உங்கள் உரிமைகளை பறிக்க முடியாது. பிற வாடகைதாரர்களைப் போலவே நீங்கள் இன்னும் பாதுகாப்புகளைக் கொண்டிருக்கலாம் மற்றும் அரசாங்கத்தின் வெளியேற்றத் தடையால் பாதுகாக்கப்படுவீர்கள்.

28  ஆகஸ்ட் 2020.

# TEMPLATE LETTER TO SEND TO YOUR LANDLORD

Dear [Add here the name of your landlord or estate agent, you can find this in your contract],

We're watching developments about COVID-19 very closely and are, as you might imagine, really concerned. We rely on our wages to pay our rent and we're going to be earning much less over the coming months.

[add here more details about your work/wage situation - make it as personal as you feel comfortable to. For example: I have lost my job and income, or whatever applies to your current situation.]

There are plenty of landlords who are worried about the containment of Covid-19 and are therefore allowing their tenants to suspend rent payments at this time. The advice from public health experts is that as many people as possible need to stay at home - and not go out and seek non-essential work - in order to successfully contain the virus, reduce the number of people dying and to ensure that the health service that we all rely to survive, isn't completely overwhelmed.

Recently published Government guidelines state that as part of our "national effort" to respond to the COVID-19 outbreak it's "important that landlords offer support and understanding to tenants who may start to see their income fluctuate" and that this should "include accept[ing] a lower level of rent" . It also states that "where tenants have difficulty paying rent over this period, we ask that landlords do not issue a notice seeking possession, particularly given that the tenant may be sick or facing other hardship due to COVID-19".

As you will have heard, the government has announced a mortgage holiday for all landlords whose tenants are experiencing financial difficulties due to coronavirus - so that they can pass this "holiday" on to their tenants. With millions of renters across the country in a difficult position, the government and the National Residential Landlords Association are asking landlords to show compassion. For these reasons, we kindly request:

[write here what you are requesting: a suspension of payments until the situation improves
OR a rent reduction of a specific amount (for example: a reduction of £400/month
OR your particular request]

We hope, for ourselves and for everyone's sake, that life becomes more stable as soon as possible. Until then, it seems all we can do is be pragmatic, avoid panic, and support each other as best we can. We hope you can consider this. Do let us know if speaking on the phone would be helpful. Looking forward to hearing your response.

Best wishes from us all,

[Your Name and Surname]
[Your Address]